DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 188/2022 |
| Deposition of Witness for | : | P.W. 11 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | M.பிச்சைபாண்டியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.01.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது காவல் ஆய்வாளராக பணி ஓய்வு பெற்று தேனியில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்னால் கடந்த 13.03.2016 ம் தேதி பகல் 14.45 மணியளவில் காரைக்குடி வடக்கு காவல் நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு விஜயக்குமார் என்பவருக்கு அரசு மருத்துவமனை காரைக்குடியில் இருந்து வரப்பெற்ற தகவல் பெற்று அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த திரு.இராமநாதன் வயது (63/2016) தந்தை பெயர் பழனியப்பச் செட்டியார் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலையக்குற்ற எண்.130/2016 பிரிவுகள் 294(பி), 307 இதச பிரிவுகளாக வழக்கு பதிவு செய்திருந்தார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி முதல் தகவல் அறிக்கையை முறையாக உயர் அதிகாரிகளுக்கும், நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்துவிட்டு அதன் மற்றொரு பிரதியை மேல் விசாரானைக்கு எனக்கு கொடுத்ததை பெற்று 13.03.2016 ம் தேதி பகல் 15.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தின் சாட்சிகளான செல்வம் மற்றும் பாண்டி ஆகியோர் முன்பாக பார்வையிட்டு பார்வை மகஜர் , மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அவை முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சம்பவ இடத்தில் படிந்திருந்த இரத்தம் பட்ட மண் மற்றும் இரத்தம் படாத மண் ஆகியவைகளை அதே சாட்சிகள் முன்பாக தனித்தனியாக எடுத்து அத்தாட்சியில் கைப்பற்றினேன். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**. சம்பவ இடத்தில் படிந்திருந்த இரத்தம் பட்ட மண் மற்றும் இரத்தம் படாத மண் ஆகியவை சா.பொ. 2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.பின்னர் சாட்சிகள் கணேசன், ஆறுமுகம், சிதம்பரம், செல்வம், மற்றும் பாண்டி ஆகயோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை தேடியதில் தலைமறைவாக இருந்தார். அதன் பின்னர் 14.03.2016ம் தேதியன்று சாட்சிகள் பழனியப்பன், பூங்கோதை மற்றும் சபாரத்தினம் ஆகியோர்களை விசாரித்தும், அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தும், மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த வாதி இராமநாதனை விசாரித்து அவர் வாக்குமூலத்தையும் பதிவு செய்தும், பின்பு 18.03.2016ம் தேதி சாட்சி இராமையாவை விசாரித்து அவரின் வாக்குமூலத்தையும் பதிவுசெய்தேன். இந்நிலையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவான 294(பி) 307 இதச விலிருந்து சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் மற்றும் எனது விசாரணையின் அடிப்படையில் சட்டப்பிரிவு 294(பி) 120(பி) , 109 மற்றும் 307 இதசவாக சட்டப்பரிவுகள் மாறுதல் அறிக்கையை தயார் செய்து மாண்புமிகு காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த சட்டப்பரிவுகள் மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில், 27.03.2016ம் தேதி பகல் 13.00 மணிக்கு எதிரி இராஜேஸ்குமார் என்பவரை காரைக்குடி புதிய பேருந்து நிலையம் முன்பு வைத்து பார்ட்டி சகிதம் சுற்றி வலைத்து விசாரித்தேன், அப்போது அவர் தனது பெயர் மற்றும் முகவரியை சரியாக கூறியதால் இவ்வழக்கு சம்பந்தமாக விசாரிக்க கேட்டபோது அவர் தானாக முன்வந்து எவ்வித வற்புறுத்தலோ அச்சுறுத்தலோ இன்றி சாட்சிகள் மணிகண்டன் மற்றும் ஆனந்தக்குமார் ஆகியோர் முன்பாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச்சென்றால் செட்டியாரை வெட்டுவதற்கு பயன்படுத்திய அரிவாளை மறைத்து வைத்த இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர் செய்கிறேன் என கூறியதன் அடிப்படையில் மேற்படி எதிரியுடன் சாட்சிகளையும் உடன் அழைத்துச் சென்று 27.03.2016 ம் தேதி பகல் 15.30 மணிக்கு வள்ளுவர் நகர் 3 வது வீதி அருகில் உள்ள சவுக்கு காட்டு புதரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 1.5 அடி நீளமுள்ள அருவாள் ஒன்று இரத்தக்கரை படிந்ததை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5.பின்னர் இவ்வழக்கின் மற்ற எதிரிகளான கார்த்திகேயன் மற்றும் லதா என்பவரை அவர்களது வீட்டு முன்பாக வைத்து கைது செய்து, கைது செய்த விவரத்தை அவர்களது உறவினர்களுக்கு தெரிவித்து எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துகளுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து முறையாக வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றிய சொத்தை படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி பி.ஆர்.75/2016 பெற்றேன். **அந்த இரத்தம் படிந்த மற்றும் படியாத மண் மற்றும் அரிவாளுக்கான படிவம் 91 முறையே அ.சா.ஆ.10, 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி தடயச் சொத்தை இராமநாதபுரம் இரசாயன பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி பரிசோதனை அறிக்கை பெற்றுத்தர நீதிமன்றத்திற்கு கடிதம் கொடுத்து, பரிசோதனை அறிக்கை பெற்றேன். பரிசோதனை அறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் திரு.வைரமுத்து அவர்களை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த தடயவியல் பரிசோதனைஅறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** இவ்வழக்கில் சாட்சிகள் ஆனந்தக்குமார், மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். காயம் பட்டவருக்கு சிகிச்சை வழங்கிய காரைக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. ஆனந்தக்குமார் மற்றும் மீனாட்சி மிசன் மருத்துவமனை மருத்துவர் திரு.தீனதயாபாரன், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.விஜயக்குமார் காரைக்குடி வடக்கு காவல் நிலையம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். **மீனாட்சி மிசன் மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச் சான்றிதழ் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் 1 வது எதிரியான இராஜசேகர் என்பவரை தேடியதில்

தொடர்ந்து தலைமறைவாக இருந்தவர், மாண்புமிகு சிவகங்கை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளார்.

இவ்வழக்கில் எனது விசாரணையை முடித்து கடந்த 10.06.2016 ம் தேதி எதிரிகள் இராஜசேகரன், இராஜேஸ்குமார், கார்த்திகேயன், லதா ஆகியோர்கள் மீது பிரிவுகள் 294(பி), 109, 120(பி), 307 இதச உடன் இணைந்த 34 இதசவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**2 முதல் 4 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வழக்கு சாட்சிகள் அனைவரையும் நான்தான் விசாரித்தேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் அனைவரும் அ.சா.1 ஐ கொலை செய்ய வேண்டும் என்று சதிதிட்டம் தீட்டியதாக அவருக்கு திலகா ரமேஷ் என்பவர் சொல்லிதான் தெரியும் என்று நான் விசாரிக்கும் போது அ.சா.1 வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரிதான். திலகா ரமேஷ் என்பவரை விசாரித்தேனா என்றால் ரமேஷை மட்டும் விசாரித்தேன். என்னுடைய விசாரணையில் அ.சா.1 திலகா ரமேஷ் இரண்டு பேரும் சொன்னதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். இராமையாவின் வாக்குமூலத்தில் இந்த விவரத்தை அ.சா.1 ஐ கொல்வதற்கு சதிதிட்டம் செய்வதை தானும், ரமேஷ்ம் பார்த்தோம் என வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 ஐ கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டப்படுவதாக 08.03.2016 லிருந்து சம்பவம் நடந்த நாள் வரை ஏதேனும் புகார் கிடைக்கப்பட்டதா என்றால் இல்லை, அதற்கு முன்பாக எதிரி இராஜசேகர் மீது அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண்.84/2016 வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

2. நான் 2 வது எதிரியிடம் பெற்றதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலமானது அவரை அச்சுறுத்தி பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் சான்று பொருள் அருவாள் எதுவும் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றும், சா.பொ.1 என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 4 எதிரிகளை 1 ம் எதிரியின் நண்பர்கள் என்பதால் வழக்கிற்க்காக பொய்யாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் ஒருதலைப்பட்சமாக விசாரித்து எதிரிகள் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.